# வேலை வெற்றிடங்கள்

## கழிவு முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்)

## ஆய்வுகூட பொறுப்பு அதிகாரி – (நாள்முறை அடிப்படை) சேவையை பெறுதல்

## சந்தைப்படுத்தல் அதிகாரி –(நாள்முறை அடிப்படை) சேவையை பெறுதல்

## இயந்திர தொழில்முறை அதிகாரி – (நாள்முறை அடிப்படை) சேவையை பெறுதல்

மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற கரதியான மிஹிசரு சம்பத் முகாமைத்துவ நிலையத்தின் சந்தைப்படுத்தல் அதிகாரி பதவி மற்றும் அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற கரதியான திரவ உர உற்பத்தி தொழிற்சாலையின் (மீன் கழிவுகளில் இருந்து) ஆய்வுகூடத்தை நடத்திச் செல்வதற்கு ஆய்வுகூட பொறுப்பு அதிகாரி பதவிக்கு மற்றும் இயந்திர தொழில்முறை அதிகாரி பதவிக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** :- ஆய்வுகூட பொறுப்பு அதிகாரி

**நாள்முறை ஊதியம்** :- ரூபா 2,680/-
வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு + விசேட கொடுப்பனவு ரூபா 5000/-

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்** :- விவசாய துறையில் பட்டம் அல்லது விவசாயம் சார்ந்த துறையில் பட்டம் மற்றும் குறித்த துறையில் 2 ஆண்டுகள் சேவை அனுபவம். இரசாயன பகுப்பாய்வு அல்லது நுண்ணுயிர் விஞ்ஞானம் தொடர்பில் ஆய்வுகூட சேவை அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

**பதவி** :- சந்தைப்படுத்தல் அதிகாரி

**நாள்முறை ஊதியம்** :- ரூபா 1,870/-
வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு + விசேட கொடுப்பனவு ரூபா 5000/-

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** :- சந்தைப்படுத்தல் தொடர்பில் பட்டம் அல்லது கொழும்பு தொழில்நுட்ப கல்லூரியில் சந்தைப்படுத்தல் கற்கை ஒன்றை கற்றிருத்தல் மற்றும் 02 ஆண்டுகள் சந்தைப்படுத்தல் தொடர்பில் அனுபவம்

**பதவி** :- இயந்திர தொழில்முறை அதிகாரி

**நாள்முறை கொடுப்பனவு** :- பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்கப்படும்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** :- க.பொ.த. (சா.தர) பரீட்சையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத தடவையில் இரு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)

குறித்த பதவிக்கு தொடர்புடைய வகையில் மூன்றாம் நிலைக்கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் வகையில் தேசிய தொழில் தகைமை (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் தர தேர்ச்சியை பெற்றிருத்தல் மற்றும் குறைந்தது குறித்த துறையில் 06 மாதங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**வேறு விடயங்கள் :-**

1. சேவை ஒன்றை பெறுவதாகும்.
2. சேவையை பெற்றுத் தருகின்ற விண்ணப்பதாரர்களின் நாள்முறை கொடுப்பனவில் 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அவர்களால் செலுத்த வேண்டும் என்பதோடு (15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும்) அதிகாரசபையால் ஏற்கப்படும்.
3. சேவையை பெற்றுத்தருகின்ற விண்ணப்பதாரர்கள் நிறுவனக் கோவை, மேல் மாகாண நிதி ஒழுங்குமுறை, மேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு ஆணைகள், இலங்கை அரசினால் அல்லது மேல் மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது விதிக்கப்படும் ஆணைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

சேவையை பெற்றுக்கொள்ளும் முறை:- கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவரினால் அழைக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் முன்னால் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும். தகுதியை பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, விண்ணப்பம் கிடைத்ததாக அல்லது நிராகரிக்கப்படாததாக அறிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்பிக்க வேண்டிய முறை:- தமது விபரங்கள் அடங்கியதாக நீங்கள் தயாரிக்கும் விண்ணப்பத்தை 2025.08.14 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், கழிவு முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா.), தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சைக்கு பங்கேற்பதற்காக எந்த ஒரு கொடுப்பனவும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதோடு எந்த ஒரு வகையிலும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் முடிவுக்கு அழுத்தம் கொடுப்பது அந்தப் பதவி கிடைப்பதற்கு தகுதியற்றதாக கருதப்படும்.

மேல் மாகாண சபைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படும்.

**தலைவர்,**
**கழிவு முகாமைத்துவ அதிகாரசசை (மே.மா.)**
**2025.07.30**